செ.வெ.எண்:61 நாள்:25.11.2021

**மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் 72 பயனாளிகளுக்கு ரூ.23 இலட்சத்து 83 ஆயிரத்து 180 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், மேலுமலை ஊராட்சியில் இன்று (25.11.2021) நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் 72 பயனாளிகளுக்கு ரூ.23 இலட்சத்து 83 ஆயிரத்து 180 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:**

கொரோனா பெருந்தொற்று குறைந்துள்ள நிலையில் தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, மக்கள் தொடர்பு திட்ட முகாம் இன்று துவக்கப்பட்டுள்ளது. இம்முகாமில் பொதுமக்களுக்கு மிகவும் அவசியமான வருவாய் துறை, ஊரக வளர்ச்சித்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத்துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சுகாதாரத்துறை உள்ளிட்ட துறைகள் சார்பாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுவது குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் பொதுமக்களுக்கு துறை அலுவலர்கள் நேரடியாக எடுத்துரைத்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கொரோனா தொற்று முதல் மற்றும் இரண்டாம் அலையின் போது தினசரி 100 கணக்கில் இருந்து வந்த நிலையில் தற்பொழுது 95 சதவிகிதம் குறைந்துள்ளது. அதற்கு முழு காரணம் முதல் மற்றும் இரண்டாவது தவணை கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டதானால் கொரோனா நோய்த்தொற்று குறைந்துள்ளது. முதல் தவணை செலுத்திக்கொண்ட 2,63,000 நபர்கள் இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்திக்கொள்ளவில்லை. கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்வதன் மூலம் 85 சதவிகிதம் நோய்தொற்றிலிருந்து தற்காத்துக் கொள்ளலாம். எனவே பொதுமக்கள் அனைவரும் தவறாமல் அச்சமின்றி கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும். மாநில அளவில் நடைபெற்ற ஆய்வில் கொரோனா தடுப்பூசி செலுத்துக்கொள்ளாதவர்களுக்கு மட்டுமே இறப்பு நேரிடுகிறது. தற்சமயம் வடகிழக்கு பருவமழை இருந்துவரும் நிலையில் டெங்கு காய்ச்சல் தடுக்கும் வகையில் பொதுமக்கள்

தங்களது வீடுகள் மற்றும் பள்ளிகள், பொது இடங்கள், உடைந்த பிளாஸ்டிக், தேங்காய் ஓடு, கழிவு நீர் தேங்காத வகையில் சுத்தமாக பராமரிக்க வேண்டும். அதேபோல் குடிநீர் தொட்டிகளில் பிளிச்சிங் பவுடர் கொண்டு சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

தற்பொழுது மாவட்டம் முழுவதும் பட்டா, சிட்டா, பெயர் மாற்றம் குறித்து சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகிறது. எனவே பொதுமக்கள் தனிபட்டா, உட்பிரிவு பட்டா கோருபவர்கள் இம்முகாமினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதேபோல் தற்போது அனைத்து வாக்குச்சாவடிகளிலும் 18 வயது பூர்த்தியடைந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் முகவரி மாற்றம் போன்ற சுருக்க முறை திருத்தம் குறித்த முகாம்கள் நடைபெற்று வருகிறது. மேலும், வாக்காளர் அடையாள அட்டையில் பெயர்கள் உள்ளிட்ட விவரங்கள் தவறாக பதிவு பெற்றிருந்தால் உரிய படிவத்தை பூர்த்தி செய்து இந்த முகாம்களில் திருத்த முறை செய்து கொள்ளலாம்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குழந்தை திருமணம், இளம் வயது கர்ப்பத்தை தடுக்க பல்வேறு வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இளம் வயது கர்ப்பத்தினால் தாய் மற்றும் சேய் இறப்பு ஏற்படுகிறது. பொதுமக்கள் எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி குழந்தை திருமணம் செய்ய முயற்சி செய்பவர்கள் குறித்து மாவட்ட நிர்வாகத்திற்கும், சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும். குழந்தை திருமணத்தை தடுத்து நிறுத்திய பின்பும், திருமணம் செய்ய முயற்சி செய்பவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த மாதம் முதல் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குழந்தை திருமணம் தடுப்பு விழிப்புணர்வு மற்றும் தீவிர கண்காணிப்பின் அடிப்படையில் 80 சதவிகிதம் குறைந்துள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் வருவாய் துறை மூலம் 22 மாணவ, மாணவியர்களுக்கு இருளர் சாதிச்சான்றிதழ்களும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, இந்திராகாந்தி முதியோர் உதவித்தொகை, கல்வி உதவித்தொகை மற்றும் இயற்கை மரண உதவித்தொகை என 16 பயனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 96 ஆயிரத்து 500 மதிப்பில் நலத்திட்ட உதவிகளும், 4 பயனாளிகளுக்கு பட்டா மாறுதலுக்கான ஆணைகளும், 11 பயனாளிகளுக்கும் புதிய குடும்ப அட்டைகளும், தோட்டக்கலைத்துறை

மூலம் 6 பயனாளிகளுக்கு ரூ.3,10,780 மதிப்பில் சொட்டுநீர் பாசன கருவிகள் மற்றும் வேளாண் இடுபொருள்களும், வேளாண்மை துறை மூலம் ரூ.5,900 மதிப்பில் தார்பாய் 2 பயனாளிகளுக்கும், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டத்தின் கீழ் 11 பயனாளிகளுக்கு ரூ.18,70,000 மதிப்பில் வீடுகள் கட்டுமான பணிகளுக்கான ஆணைகள் என மொத்தம் 72 பயனாளிகளுக்கு ரூ.23 இலட்சத்து 83 ஆயிரத்து 180 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தேன்மொழி, தனித்துணை ஆட்சியர் திருமதி.பாக்கியலட்சுமி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.அமீர்பாஷா, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.கோபு, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.சாந்தி, வேளாண்மைத்துறை துணை இயக்குநர் திரு.சண்முகம், மாவட்ட ஆட்சித்தலைவர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.கிருஷ்ணமூர்த்தி, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர்(பொ) திரு.ராம்பிரசாத், துணை இயக்குநர் நில அளவை திரு.சேகர், சூளகிரி வட்டாட்சியர் திரு.ஜெ.நீலமேகன், தனி வட்டாட்சியர்(ச.பா.தி) திருமதி.டி.மிருணாளினி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சிவக்குமார், திரு.சுப்பிரமணி, ஒன்றிய குழு தலைவர் திருமதி.லாவண்யா ஹேமநாத், ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.நாகம்மாள் வெங்கடேசன், ஒன்றிய குழு உறுப்பினர் திரு.சேட்டு, துணை வட்டாட்சியர் திருமதி.காமாட்சி, வருவாய் ஆய்வாளர்கள் திருமதி.ஆர்.விஜி, திரு.முருகேசன், வட்டார மருத்துவ அலுவலர் மரு.வெண்ணிலா உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**